செய்தி வெளியீடு நாள் : 07.01.2025

சென்னை தீவுத்திடலில் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-2025-ல் இடம்பெற்றுள்ள சி.எம்.டி.ஏ. கண்காட்சி அரங்கினை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (07.01.2025) சென்னை தீவுத்திடலில் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி- 2025-ல் இடம்பெற்றுள்ள சி.எம்.டி.ஏ. கண்காட்சி அரங்கினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டார்.

சென்னை தீவுத்திடலில் நடைபெறவுள்ள 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-2025-ல் இடம்பெற்றுள்ள **சிஎம்டிஏ கண்காட்சி அரங்கானது சென்னை, குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் முகப்புடன் வடிவமைத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.**

குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையமானது உலகத்தரம் வாய்ந்த சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன் இந்தியாவிலே இரண்டாவது பெரிய பேருந்து முனையமாக கட்டப்பட்டு வருகிறது. கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையமானது அனைத்து வசதிகளுடன் இந்தியாவிலே மிகப்பெரிய பேருந்து முனையமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை தீவுத்திடலில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அரங்கத்தில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் சுமார் ரூபாய் 2,600 கோடி மதிப்பீட்டில் 193 புதிய திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் திட்டங்கள் அடங்கிய கண்காட்சி அரங்கமாக காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த அரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சமுதாய நலக்கூடங்கள், முதல்வர் படைப்பகம், நூலகங்கள், ஏரிக்கரை மற்றும் கடற்கரையை மேம்படுத்துதல் என பல்வேறு திட்டங்களாக விளக்கக் கூடிய வகையில் புகைப்படப் கண்காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில் பொதுமக்கள் பார்க்கும் வகையில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்கும் வகையில் 84 புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சி அரங்கில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வால்டாக்ஸ் சாலை மற்றும் ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய குடியிருப்புகள் மாதிரி வடிவம் (Miniatures), கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம் மாதிரி வடிவம், கொளத்தூர் மக்கள் சேவை மையம் மாதிரி வடிவம் மற்றும் கோயம்பேட்டில் உள்ள சிஎம்டிஏ அலுவலகத்தின் மூன்றாம் கட்டிடம் மாதிரி வடிவம் உள்ளிட்ட பல்வேறு மாதிரிகள் பொது மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமலு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.மா.பாலமுருகன், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எஸ்.எம்.திவாகர், மாமன்ற உறுப்பினர் திரு.எம்.இசட்.ஆசாத் மற்றும் சி.எம்.டி.ஏ. அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™